**OS NO;215/2010**
**Date:22.11.2019**
**Dw:1(Cross continuation)**
**Name:கோகுலராவ்**
**Address:**

வாதி தரப்பில் பி.வா.சா.1சாட்சியின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி=

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் எத்திராஜுலு வாரிசுகள் என்று வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால் சரிதான், அதில் 1ம் பிரதிவாதியின் தம்பியான மதனகோபாலை சேர்க்கவில்லை. 1ம் பிரதிவாதியின் தம்பியும், எனக்கு சித்தப்பாவுமான, 2முதல் 4பிரதிவாதிகளின் தகப்பனாருமான மதனகோபால் 20.4.1985ல் இறந்துவிட்டார் என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.
எத்திராஜுலு நாயுடுக்கு என் அப்பா, இறந்து போன மதனகோபால் மற்றும் வாதிகள் 1முதல் 3 வரையுள்ளவர்கள் தான் நேரடி வாரிசுகள் என்றால் சரிதான். எத்திராஜுலு நாயுடுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் 1முதல் 3வாதிகளுக்கும், இறந்து போன மதனகோபால் மற்றும் இறந்து போன என் தந்தையாருக்கு சரிபாகமாக பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் இல்லை, சரியானது அல்ல. வாதிகள் 1முதல் 3வரையுள்ளவர்கள் எத்திராஜுலு நாயுடுவின் நேரடி வாரிசுகள் இல்லையா என்றால் நேரடி வாரிசுகள் தான். (தாவா 1வது சொத்தான வீடு எத்திராஜுலு நாயுடு பெயரில் கிரையம் பெற்ற சொத்தா என்றால் <u>ஏற்கனவே கேட்ட கேள்வி).</u> என் அப்பா போட்ட வா.சா.ஆ.8ஐ படித்துபார்த்தேனா என்றால் 2008ல் படித்துப் பார்த்தேன். ஐயிட்டம் 1ஆன வீட்டுச் சொத்தை எத்திராஜுலு நாயுடு அவருடைய மூதாதையர் சொத்து மூலமாக தான் வாங்கினேன் என்று கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை, என் அப்பா குறைந்து படித்தவர் என்பதால் தான் தான் வழக்கறிஞரையே மாற்றி விட்டோம். வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட பொய் என்று சொன்னால் வாதிகளுக்கு எந்தவித சொத்தும் கிடைக்கக்கூடாது என்பதற்காக தற்போது மாற்றி சொல்கிறோம் என்று சொன்னால் தவறு. எத்திராஜுலு நாயுடு கிரையம் பெற்ற 1வது ஐயிட்ட சொத்தான வீடு அவருடைய தனிப்பட்ட வருமானம் மற்றும் மூலதனத்தை கொண்டு கிரையம் பெற்ற சொத்து, அதில் அவருடைய நேரடி வாரிசுகளான வாதிகள் 1முதல் 3, என் தகப்பனார் இறந்து போன 1ம் பிரதிவாதியான நாகேஷ்வர ராவ் மற்றும் 2முதல் 4பிரதிவாதிகளின் தந்தையான மதனகோபாலுக்கு சரிசமமாக பிரிய வேண்டும் என்று சொன்னால் இல்லை, தவறு, என் தாத்தா எத்திராஜுலு

நாயுடு இருக்கும் போது வாய்மொழியாக பாகபிரிவினை இறந்து போன 1ம்பிரதிவாதியான என் தந்தைக்கும், மதனகோபாலுக்கும் பிரித்துக் கொடுத்து விட்டார்கள். எத்திராஜ் வைத்த அடமானம் இருந்த வீட்டை 1982ல் மீட்டு 2002ல் பாகமும் பிரிக்கப்பட்டு அவர்களுடைய பாகத்தையும் விட்டு கொடுத்து விட்டார்கள். இறந்து போன என் தகப்பனாரான நாகேஷ்வரராவ் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் 1வது ஐயிட்ட சொத்தை வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொடுக்கப்பட்ட விவரத்தை பற்றி கூறியிருக்கிறாரா சொல்லவில்லை என்பதால் தான் வழக்கறிஞரை மாற்றினோம். என்னுடைய எதிர்வழக்குரையிலாவது மேற்படி செய்தி குறித்து நான் சொல்லியுள்ளேனா என்றால் பாகம் பிரித்தததையும், 2முதல் 4பிரதிவாதிகள் சொத்துக்களை விட்டுக் கொடுத்ததைப் பற்றியும் சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.41 ஆவணத்தில் தலைப்பு பாக பாத்திய விடுதலை பத்திரம் என்று உள்ளதா என்றால் உள்ளது. அதாவது மதனகோபால் வாரிசுகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பாகத்தை எனக்கு விடுதலை செய்து கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.41ல் ஏற்கனவே நாங்கள் என் தாத்தா இருக்கும் போதே வாய்மொழியாக பிரித்துக் கொண்டோம் என்பதை குறித்தோ, எங்களுக்கு பாத்தியப்பட்ட பாதி பாகம் சொத்தை பிரித்துக் கொண்டதை பற்றியோ இருக்கிறதா என்றால் பாதி பாதி பிரித்துக் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஐயிட்டம் 1ல் கண்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1537 சதுரடி ஆகும். அதில் எந்த பாகத்தை என் சித்தப்பாவிற்கு பிரித்துக் கொடுத்ததாக உள்ளது என்றாலும், கிழக்குப் பகுதி, அல்லது மேற்கு பகுதி, வடக்கு பகுதி, அல்லது தெற்கு பகுதி என்று பிரித்து கொடுத்ததாக உள்ளதா என்றால் பி.வா.சா.ஆ.41ல் மூன்றாவது பக்கத்தில் பொதுவாக அனுபவித்து வந்து தற்போது மேற்படி சொத்தில் அனுபவிக்க முடியாத படியும், சொத்தில் பிரிபடாத பாகத்தை சாட்சிகளின் முன்னிலையில் சகலபாத்தியத்தையும் விட்டு கொடுத்து விடுதலை செய்கிறேன், தங்கள் பாத்தியத்தில் ஒப்படைத்து விட்டோம் என்று உள்ளதா என்றால் சரிதான். ஆதலால் மேற்படி சொத்தில் பூர்வீக சொத்தில் இருந்து வாங்கியது குறித்தும், ஏற்கனவே தாத்தா இருக்கும் போது பாகம் பிரித்துக் கொண்டோம் என்பது குறித்தும், பி.வா.சா.ஆ41ல் இல்லை என்று சொன்னால் இல்லை. என் சகோதரி வசந்தபிரியாவிற்கு எப்போது திருமணம் ஆனது என்ற விவரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. வசந்தபிரியாவின் திருமணம் செலவிற்காக போதிய வசதி இல்லாததால் பி.வா.சா.ஆ.41ல் கையெழுத்து போட்டால் தான் பணம் கொடுப்பேன் என்று கூறி நிர்பந்தத்தின் காரணமாக தான் பி.வா.சா.ஆ.41ல் கையெழுத்து வாங்கினோம் என்று சொன்னால் தவறு. ஆகையால் பி.வா.சா.ஆ.41ல் கண்ட

ஐயிட்டம் 1ல் கண்ட சொத்து வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் சரிசமமாக 1ன் கீழ் ஐந்து பாகம் பிரிக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)**